உதவி அமர்வு நீதிமன்றம், மதுராந்தகம்

C. C. No. 1/2022

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., உதவி அமர்வு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. நீலகிருஷ்ணன் | நாள் 15.04.2026 |
| த/பெ. | |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

<u>புகார்தாரர் சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. 24.04.2016 அன்று காலை 8.30 மணியளவில் அதன் எனக்கு சொந்தமான புலியரனங்கோட்டை கிராம புல எண் 66/3B ல் விவசாயம் செய்து வரும்போது, எதிரிகள் நடராஜன், அருள், செந்தில், நாகலட்சுமி மற்றும் பாலாஜி ஆகியோர் மின்மோட்டார் ஒயரை அறுத்து எரிந்தார்கள். நான் அதுபற்றி கேட்டதற்கு நடராஜன் தன் மகன்களான அருள், செந்தில், நாகலட்சுமி மற்றும் பாலாஜி ஆகியோரிடம் அவனை அடித்து தீர்த்துக் கட்டுங்கடா என்று என்னை பார்த்து கூறினார். அருள் என் இடது கையை பிடித்துக் கொண்டார். பாலாஜி என் வலது கையை பிடித்துக் கொண்டார். அதனால் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. நடராஜன் சவுக்கு கட்டையால் எனது வலது முன் தலையில் இதோடு ஒழிந்து போடா என்று கூறி அடித்தார். நான் அங்கிருந்த திமிறி ஒடிய போது, நடராஜன் சவுக்கு கட்டையால் எனது வலது கையின் சுண்டுவிரலில் அடித்தார்.

2. அவர் மீண்டும் கீழே கிடந்த கல்லால் இடது மார்பில் அடித்தார். அதில் எனக்கு 6 வது விலா எலும்பு உடைந்துவிட்டது. பாலாஜி என்பவர் சவுக்கு கட்டையால் என் நடுமுதுகில் ஓங்கி அடித்தார். இதை பார்த்த என் மனைவி மற்றும் என் மகன் சதீஷ் ஆகியோர் அங்கு ஓடி வந்தனர் அவர்களையும் அடித்து காயப்படுத்தினார்கள். நடராஜன் என் மனைவியின் இடது கையில் சவுக்கு தடியால் அடித்தார். பாலாஜி என் மனைவியின் வலது கையில் சவுக்கு தடியால் அடித்தார். நடராஜன் என் மனைவியின் சேலையை இழுத்து பிடித்து மானபங்கம் படுத்தி இடது மார்பில் அடித்தார். செந்தில் என் மனைவியின் முதுகில் சவுக்கு தடியால் அடித்தார். செந்தில் என் மகனின் இடது பக்க மண்டையில் சவுக்கு தடியால் அடித்து இதோடு ஒழிந்து போடா என்று கூறினார். நடராஜன் என் மகனின் மார்பில் சவுக்கு தடியால் அடித்தார்.நாகலட்சுமி கீழே கிடந்த கல்லால் என் மகன் மீது அடித்தார். அதனால் என் மகன் வலது கையில் அடிப்பட்டது. எதிரிகள் திட்டம் போட்டு வந்ததால் நான், என் மனைவி மற்றும் மகன் ஆகியோர் அங்கிருந்து ஓடினோம். அப்போது பாலாஜி தடியால் என் மகனின் முதுகில் அடித்தார். அதில் என் சட்டை, லுங்கி மற்றும் துண்டில் ரத்தக் கறை ஏற்பட்டது. என் மகனின் பேண்ட், சட்டை மற்றும் துண்டில் ரத்தக் கறை ஏற்பட்டது. நாங்கள் சித்தாமூர் காவல் நிலையம் சென்றோம்.

(மேலும் முதல் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)